1984 பிப்ரவரி 18]

சென்னிமலை அருகே நொய்யல் ஆற்றில் அணை கட்டும் திட்டம்.

76—

*வினா எண் 170.57—திரு ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நொய்யல் ஆற்றில் சென்னிமலை அருகே அணை கட்ட ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்: (அ) மற்றும் (ஆ) ஆம் ஒரத்துப்பாளையம் கிராமம் (சென்னிமலை) நொய்யல் ஆற்றின் குறுக்கே ஒரத்துப்பாளையம் அணைத்திட்டம் மற்றும் கரூர் வட்டம் ஆத்துப்பாளையம் பிரதான கால்வாயை 32.75 கி.மீ. முதல் 60.00 கி.மீ. முடிய நீட்டிக்கும் திட்டத்திற்கு ரூ. 877 இலட்சத்திற்கான மதிப்பீட்டினை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்கள் அனுப்பியுள்ளார். இத்திட்டத்தின் மூலம் பெரியார் மாவட்டத்தில் 500 ஏக்கர் நிலமும் திருச்சி மாவட்டத்தில் 9,875 ஏக்கர் நிலமும் பயனடையும். இத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் கரூர் தாலுக்காவில் எவ்வளவு ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் தாலுக்காவைப் பொறுத்தவரையில் 13 கிராமங்கள் இந்தத் திட்டத்தினால் பயனடையும். இந்தத் திட்டத்தினால் பயனடையும் கிராமங்களின் பெயர்கள்; குப்பம், வெட்டமங்கலம், புன்னம், புஞ்சை புகளூர், திருகாட்டுத்துறை, புஞ்செய் தோட்ட குறிச்சி அட்டூர், மண்மங்கலம், காடப்பாறை புன்செய் காடரம்ப குறிச்சி, மின்னம்பள்ளி, குப்பச்சிப்பாளையம் பஞ்சமாதேவி.

திரு ச பாலகிருஷ்ணன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அணையின் மூலமாக பெரியார் மாவட்டத்தில் சில பகுதிகள் பாசன வசதி பெறும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள. பெரியார் மாவட்டத்தில் எந்தெந்த பகுதிகள் இந்தத் திட்டத்தினால் பாசன வசதி பெறுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பெருந்துறை வட்டத்தில் ஒரத்துப்பாளையம், மரவப்பாளையம் ஆகிய இரண்டு பகுதிகள் பயனடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. கா. நல்லப்பன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நொய்யல் ஆற்றில் கரூருக்கு சமீபத்தில் அணையை கட்டி அதிலிருந்து பெரியார் மாவட்டத்தில் சில பகுதிகளும், திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளும் பாசன வசதிக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் வேறு ஒரு கேள்விக்கு பதில் சொல்லும்போது பெருந்துறை தாலுக்காவில் நீர் பாசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். இந்த இரண்டும் முரண்பட்டதாக இருக்கிறது. ஆகவே தெளிவாக அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மூலக்கேள்விக்கு பதில் வழங்குகின்ற நேரத்தில் பெரியார் மாவட்டத்தில் சில பகுதிகளும், திருச்சி மாவட்டத்தில் சில பகுதிகளும் பயன்படும் என்று சொல்லியிருந்தேன். பெருந்துறை வட்டம் பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த வட்டம் என்று நான் கருதுகிறேன். ஆகவே உறுப்பினர் அவர்கள் வினாவிற்கும், என்னுடைய பதிலுக்கும் எந்த விதமான முரண்பாடும் கிடையாது. சரியான பதிலை நான் ஏற்கனவே வழங்கியிருக்கிறேன்.

திரு ஜி. கே. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் அணைக்கட்டு பகுதியிலிருந்து உபரி நீரை கொண்டுவந்து ஏறத்தாழ 46 ஆயிரம் ஏக்கர் நீர்ப்பாசனம் செய்வதற்கு அந்த பவானிசாகர் அணைக்கு மேலே உள்ள பகுதியில் பவானிக்குக் குறுக்கே அணையைக் கட்டி கால்வாய் வெட்டி கொடுக்கும்படி அரசுக்கு மனு கொடுக்கப்பட்டு பரிசீலிக்கப்படும் என்ற தகவலும் வந்து இருக்கிறது அந்தக்கால்வாய்க்கு அண்ணா அவர்கள் பெயரை வைக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரிடமும், மாண்புமிகு முதல்வர் அவர்களிடமும் தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. அதுபற்றி ஏதாவது தகவல் தெரியுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா கால்வாய் அமைப்பதற்கான கோரிக்கை மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து வந்திருக்கிறது. அது இப்போது தீவிர ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வுக்குப் பிறகு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

77—

பள்ளிப்பட்டு வட்டத்தில் பாசனக் கால்வாய் வெட்டும் திட்டம்

* வினா எண் 18285—திரு பூ. மு. நரசிம்மன் மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம் பள்ளிப்பட்டு வட்டத்தில்